உ

விநாயகர் துணை.

சுப்பிரமணியர்

விருத்தம்.

இஃது
தொட்டிக்கலையிலிருந்த
திருவாவடுதுறைச்
சுப்பிரமணியசுவாமிகளால்
செய்யப்பட்டது.

இவை
சண்முகசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு,

ஆரோக்கியமுதலியா
ரவர்களது
கொலம்பியன்பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

உ

கணபதி துணை.

சுப்பிரமணியர் விருத்தம்.

மாமேவு நவரத்ந கேயூர மணிமகுட மன்னி
ப்பொலிந்தமுடியும், வச்சிர நுதற்றிலகவெ
ண்ணீறுமோராறுவதனவிம்பத்தினழகும்,பா
மேவுபத்தற்கு மடைதிறந்தன்பொழுகு பன்
னிருவிழிக்கருணையும், பகரரியபழமறைபழு
த்தொழுகுசிறுநகைப் பவளஞ்சிறந்தவாயும்,
காமேவுகரகமலபந்தியுஞ் சேவலுங்கனகமயி
லுங்கிண்கிணிக், காலுமெந்நூலும்வடி வேலு
மென்மேலுமெக்காலுந் துலங்கவருவாய், தா
மோதரானந்தகோவிந்தவைகுந்தசரசகோபா
லன்மருகா, சதுமறைகளேதந்த பரமகுருவா
ய்வந்தசரவணபவானந்தனே..........(க)

கண்கொண்ட பூச்சக்கர வாளகோ ளத்தை
யொருகதிகொண்டெழுந்துசுற்றிக், ககனகூ
டந்தடவியுகசண்டமாருதக்காலொடுசுழன்று
பின்னி,விண்கொண்டமேகபடலத்தை தசசி[illegible]ந்
திதன்மெய்யென்பனெனவுகந்து, விட்டவரவி
ன்மகுடமொடுசடசடெனவுதறிநடுமேருவொ

டுபாய்ந்துகொத்தித், திண்கொண்டவல்லசுரர்
நெஞ்சுபறைகொட்டத் திடுக்கிடவிடுத்துமோ
திச், சிறைகொண்டடித்தமரர் சிறைகொண்ட
ணைத்திலகுதிறைகொண்டமயில்வாகனு, தன்
கொண்டநீபமலர் மாலையணி மார்பனே சரச
கோபாலன்மருகா, சதுமறைகளேதந்த பரம
குருவாய்வந்தசரவணபவானந்தனே, ... (௨)

துன்னுகயிலாசகிரி மேருகிரிகந்தமலைதோ
கைமலைகைலைமலைவான், சோலைமலைமேவியவி
ராலிமலைமன்னிய சுவாமிமலையுஞ்சிறந்த, செ
ன்னிமலைவேளூர்கடம்பவனமேலவயறிருவரு
ணையின்கோபுரம், திருவாவினன்குடிபரங்கிரி
திருத்தணிசிவாசலந்திருவேரகம், இந்நிலம்தி
க்குந் திருச்செந்தின் முதலான வெண்ணப்ப
டாதகோடி, எத்தலமு நீகருணை வைத்துவிளை
யாடல்விதமெத்தனையெனச்சொல்லுவேன், த
ன்னைநிகரொவ்வாதபன்னிருகை வேலனே சர
சகோபாலன்மருகா, சதுமறைகளேதந்த பர
மகுருவாய்வந்தசரவணபவானந்தனே... (௩)

நதியெங்குமூழ்கித்தலந்தோறுஞ்சுற்றியுந
ல்லநியமங்கள்செய்தும், நானென்றவாணவந்

தள்ளிடேறுமென்றுசிவஞானங்கள் பலபேசியும்;சித்திகொண்டமவுனியா யட்டமாசித்தியொடு கற்பந் தனைப்புசித்தும், கண்ணிறுகமூடிச்சிவானந்தமென்றுசெயல் கண்டிருந்தோமென்னவும், எதிரொருவருக்கொருவர்தர்க்கித்துமற்கட்டியிப்படியனந்தகோடி, இதுவல்லவதுவல்லவென்றுபோராடுவதுமென்னவகையோவறிகிலேன், சதமென்னவுன்னைநா னம்பினேனம்பினேன்சரசகோபாலன்மருகா,சதுமறைகளைதந்தபரமகுருவாய்வந்தசரவணபவனை.

நாரதப்பிரமாதி யமரர்கின்னரருரகர் நாரணன்முதற்பண்ணவர்,நடுக்கம்பொருந்தியவிடுக்கண்களைந்திடநடக்குங்குழந்தைவயதில்-சூரபத்மாசுரன் கயமுகன்குருகன் துன்முகன் பானுகோபன்-திட்டவஞ்சகரவுஞ்சாசுரன்சிங்கனொடுசுற்றியவரக்கரையெலாம்-கோரசங்காரணதூளிபடலங்கொண்டுகூறுபடியுனதுவெற்றிக்-கொடியேறவிந்த்ரன்மணிமுடியேறவானாடுகுடியேறவைத்ததுரையே - தாரணியின்மேவுபரிபூரணவுலாசனே சரசகோ பாலன்மருகா-சதுமறைகளைதந்தபரமகுருவாய்வந்த.

சீலமிகுதற்பரனை யுன்னித்ததேகத்தியான
த்தெழுந்தூபொங்கிச் - சில்லென்றுமெய்ம்ம
றந்தானந்தமவுனஞ் செனிக்கக்குவிந்துகண்
ணீர்,ஆலிபொழியக்கருணையுள்ளங்கனிந்துரு
கவன்புருக வென்புருகவே- அங்கங்குழைந்து
புளகிக்கநின்றுருகுவாரப் படிப்பொன்றறிவ
னோ; காலங்கழித்திண்டு வீணுக்கலைந்துபல
காலம்ப்ரபஞ்சமாயக்- கட்டுற்தட்படிந்தேகிட
க்கின்றபாசங்கடக்கும்படிக்கருளுவாய்- தால
முழுதுண்டுநிலை கண்டகோ தண்டபால் சரச
ரோகாபாலன்மருகா - சதுமறைகளேதந்தபரம
குருவாய்வந்தசரவணபவானந்தனே......(௬)

கல்லாலெதிர்ந்துமுன்னைச்சிலைத்தந்துபி
ன்கண்ணைப் பறித்துவைத்தும் - கருதுவசை
சொல்லியுஞ்சுய்யசிறுமைந்தனைக் கறிசமை
த்தூணமைத்தும் - வில்லாலடித்துமோர்பாய
லிற்றனுடைய விரதஞ் செலுத்திவித்தும்-
வேலையிற்றாறுசேழன்றம்பிரானுக்குமெய்
யன்பனெனநடந்தும் - நல்லாரெனப்பேறு
பெற்றார்கள் தபண்டைநாள்செய்தபூசையீச
னன் அருள்பயாமெனக்குன் கிருபையல்லாது
தாவேவதுவேறுமுளதோ- கல்லாபவுல்லாசவில்

மேலுறுவல்லாளசரசகோபாலன்மருகா - சதுமறைகளேதந்தபரமகுருவாய்வந்தசரவணபவானந்தனே.................(எ)

அற்புதமிகப்புகழ் திருப்புகழ்விருப்பொடுசொலருணகிரிதனையுகந்தாய்- அன்புயனிவின்பமுறு கும்பமுனிமுன்புவர ன்புருகுண்புரைத்தாய் - உற்பனவரக்கனெடுசர்ப்பனமனம்பயமுடற்றநற்கீரனொருநாள் - உன்சலிகைதஞ்சமெனநெஞ்சுருக வஞ்சகிரவுஞ்சநேர்கிரிபிளந்தாய் - எப்படியுமுற்படும்வினைப்பயனுலப்புமதையிப்புவியிலேமறுப்பாய் - ஈதுகலி காலமென் றெண்ண வொண்ணாது நானேழையடியேனாகையால் - தற்பரதயாபரமனேரதமகிழ்ந்துதவுசரசகோபாலன்மருகா,சதுமறைகளேதந்தபரமகுருவாயவந்தசரவண

தீராதமாயச் சுகந்தந்தவிக்கடுஞ் செனனஞ்செழித்தபின்பு-செகதலமயக்கமிதிலேயென்குடித்தனந்தியமருளோர்வங்கணம்-போராடுசஞ்சாரபாசபந்தம்மிதிற்போகம வாரிணைக்கம்- பொறிவாயலைக்குமீதுள்ளபடிமுன்வினைப்போகந்தொடர்ந்தநெறியால்-ஆராலுமு

டிவுருதா ஞலிதற்கு நல்லறிவென் றதீபமொன்
றுண்-டவ்வழியிலேமனஞ் செல்லாமலலைகின்
றவடியேனையாட்கொள்ளுவாய் - தாரோருடன்
னிருபுயாசலக்கடவுளே சரசகோ பாலன்மரு
கா-சதுமறைகளே தந்தபரமகுருவாய்வந்தசர
வணபவானந்தனே........................(௯)

தருகாமமோகமுறு திமிதிமிங்கலமிக்க த
னலோபவனமுதலையாம்- தற்கோபமனல்வட
வைமூடத்துவம்பாசிசஞ்சலமெனுந்தரங்கம்,
அரியதெளிவொருகுமிழி யஞ்ஞான வாரிதியி
லலைகின்றசீவராசி அத்தனையுமீனமேமெ
ருவீசுவலையவ்வுயிரில்யானுமொருவன்-கருத
ரியபாரப்பெருங்கடல்கடந்தேகடத்தேறவே
ண்டுமென்றால்-கைத்தவணையிலையினி யென்
செய்குவேனுன துகாற்றவணைலகப் பற்றினே
ன்- சரியமர்செய்நெடியபடை சூரகெஜசிங்க
மேசரசகோபாலன்மருகா- சதுமறைகளே தந்
தபரமகுருவாய்வந்தசரவணபவானந்தனே.()

தூயமொழியைந்தைடிமடக்கப் டலாதிகள்
நடுலகின்றவழிமறுத்துச் - சுழிமுனைதிறந்து
மூலாதாரமேலாத் துவாதசாந்தத்தை முட்டி-
வாயுவையிறுக்கிப் பெலத்துவருகுண்டலியை

வவ்விமேற்கொண்டெடுத்துவாசியைநடத்திய
வ்வோசையைத்தாவென்று வழிகொண்டு நாத
வெளியில்-தோயும்பரப்பிரமபூரணவிலாசம
தும்சோதிப்பதென்னவெளிதோ தொலையாது
நிலையாத தாகையாலுன்பதத் துணையே துணை
ய்பற்றினேன்-தாயகமனோகரமயூரவாகனமு
ருகசரசகோபாலன்மருகா- சதுமறைகளேத
ந்தபரமகுருவாய்வந்தசரவணபவானந்தனே.

கண்ணேறுவாராதுபிணியொன்றுசேராது
கவலைப்படாதுநெஞ்சம்- கலியாதுசலியாது
நலியாதுமெலியாது கலியென்றம்பயடாது-
விண்ணேறு மணுகாது கன்மவினை தொடரா
துவிழமச்சுரம்வராது - வெய்யபூதம்பில்லிவ
ஞ்சனைகடொடராவிஷம்பரவுசெந்துமடரா-
எண்ணேறுசென்னங்கள்கிடையாது காலபய
மெள்ளளவுமேயிராதிவ் - வேழைக்கிரங்கியரு
டெய்வமுனையல்லாமலின்னமொருதெய்வமு
ண்டோ தண்ணேறுகங்கைமலைமங்கையருடங்
கமேசரசகோபாலன்மருகா- சதுமறைகளேத
ந்தபரமகுருவாய்வந்தசரவணபவானந்தனே.

சுப்பிரமணியர் விருத்தம்.

முற்றிற்று.